நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : திருமதி.ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப.

ந.க.எண்:7898/2022/பே2 நாள்:19.12.2022

பொருள்: பணி வரன்முறை – பேரூராட்சிகள் நிருவாகம் – சேலம் மண்டலம் நாமக்கல் மாவட்டம் – பேரூராட்சிகளில் கீழ்நிலை பணியிடங்களில் பணிபுரிந்து 20 சதவீத காலி பணியிடங்களில் அரசு நிலையக்கப்படாத கீழ்நிலை பணியாளர்கள் – இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக பணியில் இணைந்த நாள் முதல் பணியினை வரன்முறை செய்து ஆணைபிறப்பித்தல் – தொடர்பாக.

23/12/2022

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.132 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(பேரூ1) துறை, நாள்.20.11.2020.
2. நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண். 2481/2013/பே3, நாள். 04.12.2020 செயல்முறைகள்
3. செயல் அலுவலர், பரமத்தி பேரூராட்சி கடிதம் ந.க.எண். 274/2022 நாள். 14.11.2022.
4. செயல் அலுவலர், ஆலாம்பாளையம் பேரூராட்சி கடிதம் ந.க.எண். 435/2020, நாள். 18.11.2022.
5. செயல் அலுவலர், மல்லசமுத்திரம் பேரூராட்சி கடிதம் ந.க.எண். 404/2020/அ1 நாள். 23.11.2022.
6. தொடர்புடைய ஆவணங்கள்

------

**ஆணை:**

பார்வை 1–இல் காணும் அரசாணையில், சேலம் மண்டலம், நாமக்கல் மாவட்ட பேரூராட்சிகளில் ஏற்பட்ட காலி பணியிடங்களில் மாவட்ட பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலை பணியாளர்களுக்கு 20% ஒதுக்கீட்டின்படி இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் தகுதிவாய்ந்த 3 (மூன்று ) நபர்களுக்கு பணிமாறுதல் மூலம் நியமனம் செய்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

பார்வை 2–இல் காணும் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவில், நாமக்கல் மாவட்ட பேரூராட்சிகளில் ஏற்பட்ட காலி பணியிடங்களில் பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலை பணியாளர்களுக்கு 20% ஒதுக்கீட்டின்படி நாமக்கல் மாவட்ட பேரூராட்சிகளில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் பதவி உயர்வு மூலம் கீழ்காணும் அட்டவணையின்படி 3 (மூன்று) பணியாளர்களுக்கு பணியிடம் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதன் அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள பேரூராட்சிகளில் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் (திருவாளர்கள்) | பதவி மற்றும் பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 1 | சி.அண்ணாதுரை | இளநிலை உதவியாளர் சேந்தமங்கலம் பேரூராட்சி | 07.12.2020. மு.ப | 07.12.2020. மு.ப |
| 2 | வீ.சீனிவாசன் | வரித்தண்டலர் ஆலாம்பாளையம் பேரூராட்சி | 10.12.2020 மு.ப | 10.12.2020 மு.ப |
| 3 | சா.ராஜு | வரித்தண்டலர் மல்லசமுத்திரம் பேரூராட்சி | 10.12.2020 மு..ப | 10.12.2020 மு..ப |

2...

மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்கள் பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் பணியினை அவரவர் பணியில் இணைந்த நாள் முதல் பணிவரன்முறை (Service Regularisation) செய்து இதன் வழி ஆணையிடப்படுகிறது.

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவுகளை சம்மந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள தொடர்புடைய செயல் அலுவலர்களுக்கு இதன் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
நாமக்கல்.

பெறுநர்:
மேற்காணும் அட்டவணையில் கண்டுள்ள பணியாளர்கள்,
(தொடர்புடைய பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் வாயிலாக)

நகல் :
1. சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு தவலுவலக்காக அனுப்பப்படுகிறது.
2. செயல் அலுவலர்கள், சேந்தமங்கலம், ஆலாம்பாளையம், மல்லசமுத்திரம் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.
3. இருப்புக் கோப்பு.